திரு. உ. சுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, ஆங்கிலத்தில் லேம்ப்ஸ் (LAMPS) என்று போட்டு இருப்பது எங்களுக்குப் புரியவில்லை. அதை அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : தலைவர் அவர்களே, LAMPS என்பது Large sized Multi purpose Co-operative Society.

பதிவு செய்து பத்தாண்டுகளாகியும் வேலை கிடைக்காதோர் எண்ணிக்கை

*வினா எண் 590—திரு. ப. பொன்னுரங்கம் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாவட்ட வேலைத்தேடித் தரும் நிறுவனங்களில் District Employment (Exchanges) வேலைக்காக பெயரைப் பதிவு செய்து சுமார் பத்தாண்டுகளாகியும் இதுவரை வேலை வாய்ப்புக்கிடைக்காமல் எண்ணற்ற இளைஞர்கள் அவதியுறுவதை இந்த அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில் இக்குறையினை நீக்க அரசு எடுக்கவிருக்கும் துரிதமான நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : (அ) மற்றும் (ஆ): வேலைவாய்ப்பகங்களில் செல்லுபடிப் பதிவேட்டில் வேலைக்காக பதிவு செய்து பத்து ஆண்டுகளுக்கு மேல் காத்திருப்பவர்களின் எண்ணிக்கை 30-9-1980-ல் கணக்கிட்ட மொத்த எண்ணிக்கையில் 0·7 சதவீதமாகும். இவர்களுக்கு பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன:

1. வேலைவாய்ப்பகங்களில் சுழல் (Rotation) முறைக்கு மற்றவர்கள் போல் உட்படுத்தப்படாமல் இதர நிபந்தனைகளாகிய வயது மற்றும் கல்வித்தகுதிகளைக் கொண்டிருப்பின் வேலைக்கான காலியிடங்களுக்கு இவர்கள் பெயர்களை பரிந்துரை செய்யப்படுகிறது.

2. இவர்கள் வேலைவாய்ப்பக அதிகாரிகளிடம் தங்கள் பெயரை தகுதியான காலியிடங்களுக்கு உடனடியாகப் பரிந்துரை செய்ய முறையிடலாம்.

3. வேலைவாய்ப்பகங்களில் பதிவு செய்து நீண்ட காலமாக வேலை வாய்ப்பிற்குக் காத்திருக்கும் பதிவாளர்களுக்கு, பணியிலமர்த்தும் முன்னேற்றத்தைத் தொடர்ந்து கவனிக்க ஒரு சிறப்புப் பதிவேடு பயன்படுத்தப்படுகிறது.

[1981 ஏப்ரல் 1]

திரு. ப. பொன்னுரங்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, 10 ஆண்டுகளுக்கு மேலும் வேலை வாய்ப்பு அலுவலங்களில் பதிவு செய்து வேலைக்காக காத்து இருப்பவர்கள் இருக்கிறார்கள் என்று ஒப்புக் கொண்டதற்கு நன்றி. எனக்குக் கொடுத்து இருக்கிற தகவல் என்ன என்று சொன்னால், 10 ஆண்டுக் காலத்திற்கு முன்பு 22 வயது என்கிற நிலையில் அதாவது 1971-ல் பதிவு செய்தவர்களுக்கு இன்றையதினம் 32 வயது ஆகிறது. அரசாங்கஉத்யோகங்களுக்குச்செல்லவேண்டும்என்று சொன்னால், பேக்வார்ட்கிளசாகஇருந்தால்30வயது என்றும் ஷெட்யூல்ட் காஸ்ட் ஷெயூல்ட் டிரைப்ஸ் என்று சொன்னால் 35 வயது என்றும், பார்வார்ட் கிளாசாக இருந்தால் 26 வயது என்றும் இருக்கிறபோது, இபபடி 32 வயது வரையில் வேலை கிடைக்காத நிலைமை இருப்பதைத் தவிர்க்க அரசு என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறது. அடுத்து, 10 ஆண்டுக்காலமாக பதிவு செய்து இருக்கும் நபர்கள் அங்கே போய் ரினியூவல் செய்வதற்கு என்று கேட்டால், அந்த அலு வலகத்தில் இருப்பவர்கள் இன்டக்ஸ் கார்ட் இல்லை என்று சொல்லி பிறகு வா என்று சொல்கிறார்கள். சில நேரங்களில் சீனியர் லிஸ்டில் இருக்கிற ராஜூ என்பவருக்கு பதிலாக ஜூனியர் லிஸ்டில் இருக்கின்ற ராஜூவைச் சேர்த்து விடுகிறார்கள். இப்படி அங்கே பல முறைகேடுகள் நிகழ்கின்றன. அந்த வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பல்வேறு பிரிவுகள் இருக்கின்றன. இன்ஜினியரிங் படித்தவர்கள், பட்டம் பெற்றவர்கள், உடல் ஊனமுற்றோர் என்று இப்படி பல்வேறு பிரிவுகள் இருக்கின்றன. அதனால் அங்கே ஒன்றும் புரிவது இல்லை. அங்கே நடப்பது போன்ற ஊழல் வேறு எங்கும் நடக்கவில்லை. . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி நேரத்தில் குற்றச்சாட்டுச் சொல்லக் கூடாது. விவாதத்தில் பேசுகிறபோது சொல்லலாம்.

திரு. ப. பொன்னுரங்கம்: தனி நபர் மீது தான் குற்றச்சாட்டு சொல்லக்கூடாது. குற்றச்சாட்டே சொல்லக்கூடாது என்று ரூல் இல்லை. அந்த இலாகா மீது பொதுவாகக் குற்றச்சாட்டு சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி நேரத்தில் கேள்வி கேட்கலாமே தவிர குற்றச்சாட்டுச் சொல்வது முறையல்ல. கேள்வியாகக் கேளுங்கள். ஒரு கேள்வி கேட்டு, அதற்கு அமைச்சர் பதில் அளித்தபிறகு மற்றொரு துணை வினா கேட்கலாம். ஒரேயடியாக மூன்று நான்கு கேள்விகள் போடுவது முறையல்ல.

திரு. ப. பொன்னுரங்கம்; முறைகேடுகள், ஊழல்கள் அந்த இலாகாவில் இருக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 10 ஆண்டுக்காலம் காத்திருந்து இன்னும் வேலை கிடைக்காமல் இருக்கிற வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

செய்து உள்ளவர்களுக்கு உடனடியாக வேலைவாய்ப்பு அளிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்படுமா? ஒருதனி அதிகாரி போட்டால், போதாது, பல தனி அதிகாரிகளை ஆங்காங்கு போட வேண்டும் ஆகவே இத்தகைய குறைபாடுகளை அகற்றி, அவர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்க அரசு முன் வருமா?

[முற்பகல் 10.10]

மாண்புமிகு **திரு. எம். விஜயசாரதி** : தலைவரவர்களே, வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து 10 ஆண்டுகளுக்கு மேல் ஆகியும் வேலை கிடைக்காதவர்களின் எண்ணிக்கை 7 856. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொன்னதைப் போன்று பதிவு செய்து 10 ஆண்டுகளாகியும் வேலை கிடைக்காதவர்களுடைய நன்மையைக் கருதி எவ்வளவு விரைவிலே அவர்களுக்கு வேலை வாய்ப்பு செய்து தரமுடியுமோ அவ்வளவு விரைவிலே செய்துதர இந்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளும். வேலை வாய்ப்பு அலுவலகத்தைப் பொறுத்தவரையில் பல்வேறு முறைகேடுகள் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அரசுக்கு அத்தகைய தகவல் ஏதும் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டு, நடைபெறுகின்ற தவறுகளைச் சுட்டிக்காட்டினால் நிச்சயமாக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ப. பொன்னுரங்கம் : தலைவரவர்களே, ஸ்கில்டு அண்டு அன்ஸ்கில்டு இதிலே ஜூனியர்ஸ் எல்லாம் வேலைக்குப் போயிக்கிறார்கள்; ஆனால் சீனியர்சுக்கு வேலை கிடைக்கவில்லை. அமைச்சரவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க சில விவரங்களைத் தருகிறேன். ஸ்கில்டு, திருமதி பி.ஞானமணி, பி.யு.சி. பாஸ்டு, டேட் ஆஃப் ரெஜிஸ்டிரேஷன் 7–7–1971, ரெஜிஸ்ட்ரேஷன் நம்பர் டபிள்யு–4773–71. அன்ஸ்கில்டு, தாஸரி அங்குலு, எஸ்.எஸ்.எல்.சி. ஃபெயில்டு, இந்து, ஆதி ஆந்திரா, டேட் ஆஃப் ரெஜிஸ்ட்ரேஷன் 20–12–71., ரெஜிஸ்ட்ரேஷன் நம்பர் என். டபிள்யூ 2593 71. இந்த விவரங்களை தங்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். இவர்களுடைய ஜூனியர்ஸ் எல்லாம் வேலைக்கு போய், 4, 5 ஆண்டுகள் ஆகிவிட்டன. இவர்களுக்கு இன்னும் வேலை கிடைக்கவில்லை. இவர்கள் என்ன பாவம் செய்தார்கள்? இவர்களுக்கு பாவ விமோசனம் தர அரசு முன் வருமா?

மாண்புமிகு **திரு. எம். விஜயசாரதி** : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்திருக்கிற சில நம்பர்களைச் சொல்லியிருக்கிறார்கள். அதோடு அவர்களுக்கு பின்னால் பதிவு செய்த ஜூனியர்ஸ் எல்லாம் வேலைக்குப் போயிருப்பதாகவும் சொன்னார்கள். அந்த நம்பர்களையும் தந்தால் தக்க நடவடிக்கை எடுக்க உதவியாக இருக்கும்

1981 ஏப்ரல் 1]

தவறு நடந்திருக்கிறது என்று தெரிந்தால் நிச்சயமாக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். ஆகவே, அந்த ஜூனியர்ஸ் நம்பர்கள் இருந்தால் அதையும் கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். அது இல்லாவிட்டாலும் இருக்கிற விவரங்களை வைத்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத்தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு: ஏ. சி. ண்முகம் : தலைவரர்களே, வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து 8 ஆண்டுகள் 10 ஆண்டுகள் ஆகியும் வேலை கிடைக்கவில்லை ; ஆனால் அவர்களுடைய வயது ஏறிக் கொண்டிருக்கிறது. 'கொடிது , கொடிது அவல வாழ்வு கொடிது' என்பார்கள். அப்படி இருக்கும்போது தயவுசெய்து வயது வரம்பை நீக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : தலைவரவர்களே, அதுபற்றி அரசு பரிசீலனை செய்யும்.

திரு. மு. அம்பிகாபதி : தலைவரவர்களே, வேலை பெறுவதற்வதற்கான வயது வரம்பை 55 என்று நிர்ணயிக்க அரசு முன் வருமா? 55 வயதிற்குள் எப்போது வேண்டுமானாலும் வேலைக்குப் போகலாம். வேலையற்று 'தொல்லைப்பட்டு, வெளியே திரியும் விபரீத நெஞ்சங்கள்'' என்று சி.என்.ஏ. அவர்கள் சொன்னார்கள். ஆக, வேலையற்றுத் திரியும்போது விபரீத எண்ணங்கள் வருகின்றன. ஆகவே, அத்தகைய விபரீத எண்ணம் ஏற்படாமல் இருக்க அவர்களுக்கு வேலை கொடுக்க அரசு முன்வருமா? வேலை வாய்ப்பு அலுவலகத்தில் 55 வயதுவரையில் பதிவு செய்து கொள்ளவும், வேலை பெறுவதற்கான வயது வரம்பை 55 என்று நிர்ணயிக்கவும் அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : தலைவரவர்களே, அத்தகைய எண்ணம் இல்லை.

வடாற்காடு வேலைவாய்ப்பு அலுவலகத்தை இடம் மாற்றுதல்.

*வினா எண். 591—திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம் ஆலங்காயத்திலுள்ள வேலை வாய்ப்பு அலுவலகத்தை திருப்பத்தூரில் மாற்றி அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இதை மாற்றுவதற்காக அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன ?